ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ முந்துற ॥


*This document[*] has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***


[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முந்துற ॥

## திருமாலிருஞ்சோலை - 1

‡முந்துற உரைக்கேன் விரைக் குழல் மடவார்⋆
கலவியை விடு தடுமாறல்⋆
அந்தரம் ஏழும் அலை கடல் ஏழும்
ஆய⋆ எம் அடிகள் தம் கோயில்⋆
சந்தொடு மணியும் அணி மயில் தழையும்⋆
தழுவி வந்தருவிகள் நிரந்து⋆
வந்திழி சாரல் மாலிருஞ்சோலை⋆
வணங்குதும் வா! மட நெஞ்சே! (1)

இண்டையும் புனலும் கொண்டிடை இன்றி⋆
எழுமினோ தொழுதும் என்று⋆ இமையோர்
அண்டரும் பரவ அரவணைத் துயின்ற⋆
சுடர் முடிக் கடவுள் தம் கோயில்⋆
விண்டலர் தூளி வேய் வளர் புறவில்⋆
விரை மலர்க் குறிஞ்சியின் நறுந் தேன்⋆
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை⋆
வணங்குதும் வா! மட நெஞ்சே! (2)

பிணி வளர் ஆக்கை நீங்க நின்றேத்தப்⋆
பெரு நிலம் அருளின் முன்னருளி⋆
அணி வளர் குறளாய் அகல் இடம் முழுதும்⋆
அளந்த எம் அடிகள் தம் கோயில்⋆
கணி வளர் வேங்கை நெடு நிலம் அதனில்⋆
குறவர் தம் கவணிடைத் துரந்த⋆
மணி வளர் சாரல் மாலிருஞ்சோலை⋆
வணங்குதும் வா! மட நெஞ்சே! (3)

www.prapatti.com

சூர்மையிலாய பேய் முலை சுவைத்துச்⋆
    சுடு சரம் அடு சிலைத் துரந்து⋆
நீர்மை இலாத தாடகை மாள⋆
    நினைந்தவர் மனம் கொண்ட கோயில்⋆
கார் மலி வேங்கை கோங்கலர் புறவில்⋆
    கடி மலர்க் குறிஞ்சியின் நறுந் தேன்⋆
வார் புனல் சூழ் தண் மாலிருஞ்சோலை⋆
    வணங்குதும் வா! மட நெஞ்சே! (4)

வணங்கலில் அரக்கன் செருக்களத்தவிய⋆
    மணி முடி ஒருபதும் புரள⋆
அணங்கெழுந்தவன் தன் கவந்தம் நின்றாட⋆
    அமர் செய்த அடிகள் தம் கோயில்⋆
பிணங்கலில் நெடு வேய் நுதி முகம் கிழிப்பப்⋆
    பிரசம் வந்திழிதர⋆ பெருந் தேன்
மணங்கமழ் சாரல் மாலிருஞ்சோலை⋆
    வணங்குதும் வா! மட நெஞ்சே! (5)

விடங்கலந்தமர்ந்த அரவணைத் துயின்று⋆
    விளங்கனிக்கிளங்கன்று விசிறி⋆
குடங்கலந்தாடிக் குரவை முன் கோத்த⋆
    கூத்த எம் அடிகள் தம் கோயில்⋆
தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத்⋆
    தடவரைக் களிறென்று முனிந்து⋆
மடங்கல் நின்றதிரும் மாலிருஞ்சோலை⋆
    வணங்குதும் வா! மட நெஞ்சே! (6)

தேனுகன் ஆவி போயுக⋆ அங்கோர்
    செழுந் திரள் பனங்கனி உதிர⋆
தான் உகந்தெறிந்த தடங்கடல் வண்ணர்⋆
    எண்ணிமுன் இடம் கொண்ட கோயில்⋆
வானகச் சோலை மரதகச் சாயல்⋆
    மா மணிக் கல்லதர் நிறைந்து⋆

www.prapatti.com

மானுகர் சாரல் மாலிருஞ்சோலை⋆
    வணங்குதும் வா! மட நெஞ்சே! (7)

புதமிகு விசும்பில் புணரி சென்றணவப்⋆
    பொரு கடல் அரவணைத் துயின்று⋆
பதமிகு பரியின் மிகு சினம் தவிர்த்த⋆
    பனி முகில் வண்ணர் தம் கோயில்⋆
கதமிகு சினத்த கட தடக் களிற்றின்⋆
    கவுள் வழிக் களிவண்டு பருக⋆
மதமிகு சாரல் மாலிருஞ்சோலை⋆
    வணங்குதும் வா! மட நெஞ்சே! (8)

புந்தியில் சமணர் புத்தர் என்றிவர்கள்⋆
    ஒத்தன பேசவும் உகந்திட்டு⋆
எந்தை பெம்மானார் இமையவர் தலைவர்⋆
    எண்ணிமுன் இடம் கொண்ட கோயில்⋆
சந்தனப் பொழிலின் தாழ் சினை நீழல்⋆
    தாழ்வரை மகளிர்கள் நாளும்⋆
மந்திரத்திறைஞ்சும் மாலிருஞ்சோலை⋆
    வணங்குதும் வா! மட நெஞ்சே! (9)

‡வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை⋆
    மா மணி வண்ணரை வணங்கும்⋆
தொண்டரைப் பரவும் சுடர் ஒளி நெடுவேல்⋆
    சூழ் வயல் ஆலி நன்னாடன்⋆
கண்டல் நல் வேலி மங்கையர் தலைவன்⋆
    கலியன் வாய் ஒலி செய்த பனுவல்⋆
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள்⋆
    ஆள்வர் இக்குரை கடல் உலகே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com